(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 9

| | | |
|---|---|---|
| Name | : | வினோத்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 24.11.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் பெருந்துறையில் Head Surveyor ஆக பணிபுரிகிறேன். 2018ம் ஆண்டு நான் திருச்செங்கோட்டில் டவுன் சர்வேயராக பணியிலிருந்த போது 27.10.2018 ம் தேதி காலை 10.00 மணியளவில் ஆணையருடன் நிலத்தை பார்வையிட்டு அளப்பதற்காக திருச்செங்கோடு உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்திருந்தது. அதன் பேரில் நான் , விஏஓ மணி என்பவர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் திருச்செங்கோடு கிழக்கு ரத வீதியில் உள்ள பூக்கடை லைனில் உள்ள, குடியிருப்புக்கு உகந்தது அல்லாத பழைய கட்டிடத்தை அளக்க சென்றோம். எதிர் தரப்பினர் ஆட்சேபனை தெரிவித்தனர். 3 வருடங்கள் ஆனதால் அவர்களை சரியாக ஞாபகமில்லை. நாங்கள் அளப்பதை measurement தெரியவேண்டுமென்பதற்காக வாதி தரப்பினர் செல்போனில் வீடியோவில் பதிவு செய்தார்கள். எதிரி தரப்பினர் பிரச்சினை செய்து அடிக்க வந்தார்கள்,. அதில் வீடியோ எடுத்துக்கொண்டிருந்தவரின் கையிலிருந்த மொபைல் கீழே விழுந்துவிட்டது. மற்றொரு எதிர்தரப்பினர் கத்தியை எடுத்துக்கொண்டு பிரச்சினை செய்ததால் எங்களால் அளக்க இயலவில்லை. நீதிமன்ற ஆணையரிடம் எதிரி தரப்பினர் வாக்குவாதம் செய்தார்கள். போலிசார் வந்ததால் அதற்கு பிறகு பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை. நாங்கள் அளந்துவிட்டு வந்துவிட்டோம். 4 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை.-

போலிசார் விசாரணையில் 161(3) குவிமுச வாக்குமூலத்தில் 30.10.2018ம் தேதி சம்பவம் நடந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் 27.10.2018 ம் தேதி சம்பவம் நடந்ததாக தான்

சொல்லியுள்ளேன். 25.10.2018ம் தேதி காலை நிர்மலாதேவி என்பவர் கொடுத்த ஆட்சேபனை மனு திருச்செங்கோடு தாசில்தார் அலுவலகத்திலிருந்து எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதென்றால் சரிதான். ஆனால் தேதி ஞாபகமில்லை. ஆட்சேபனை மனுவை பெற்ற பின்பு நான் எவ்வாறு அளப்பதற்கு சென்றேன் என்றால் நீதிமன்ற ஆணையர் கொடுத்த சம்மனின் பேரில் தான் சம்பவ தினத்தன்று அளக்க சென்றோம். நீதிமன்றத்திலிருந்து அளக்கவேண்டாமென்று சொல்லியிருந்தால் சென்றிருக்க மாட்டோம். திருச்செங்கோடு தாசில்தாரிடமும், நகராட்சி ஆணையரிடமோ நிலத்தை அளப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தது சம்பந்தமாக suggession எதுவும் கேட்டேனா என்றால் இல்லை. நீதிமன்ற உத்தரவை தான் நான் பின்பற்றினேன். நாங்கள் அங்கு சென்றபோது கட்டிடத்தின் கதவுகள் அனைத்தும் திறந்திருந்ததா என்றால் ஒரு கதவு திறந்திருந்தது. அங்கு எத்தனை கதவுகள் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் அங்கு சென்றபோது காவல் துறையினர் எங்களுடன் வந்திருந்தார்களா என்றால் எங்களுடன் வரவில்லை . அங்கு பிரச்சினை ஏற்பட்டது, நீதிமன்ற ஆணையர் போலிசுக்கு தகவல் சொன்னார்,. அதன் பிறகு போலிசார் வந்தனர். கத்தியை எடுத்து வந்தவர் எங்கிருந்து எடுத்துவந்தார்ஏ ன்றால் முதலில் எதிர் தரப்பில் ஒருவர் செல்போனை தட்டிவிட்டார். மற்றொருவர் கத்தியை எடுத்துவந்தார். அவரை எதிரிகளில் ஒருவர் கத்தியை எடுக்க வேண்டாமென்று தடுத்தார். அவர் எங்கிருந்து கத்தியை எடுத்து வந்தார் எ ன்று எனக்கு தெரியாது. அவர் எடுத்து வந்த கத்தி சின்ன கத்தியா, பெரிய கத்தியா என்றால் 3 வருடங்கள் ஆனதால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எதிர் தரப்பினர் கத்தியை எடுத்துக்கொண்டு வந்தபோது அங்கு காவல் துறையினர் இருந்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. டேப் உபயோகப்படுத்தி அளந்தோமா என்றால் Distance மீட்டர் வைத்து அளந்தோம். நிலத்தை அளக்க சென்றபோது இருதரப்பு வழக்கறிஞர்களும் இருந்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்ற ஆணையர் இருந்தார். அவரிடம் instruction பெற்று நிலத்தை அளந்தோம். எதிர் தரப்பினர் என்னிடம் ஏதேனும் பிரச்சினை செய்தார்களா என்றால் பிரச்சினை செய்யவில்லை, ஆனால் பிரச்சினைக்குரியது அளக்க வேண்டாமென்று சொன்னார். எதிரிகள் அசிங்கமான வார்த்தைகள் எதுவும் பயன்படுத்தினார்களா என்றால் ஞாபகமில்லை. அங்கு கூட்டம் கூடிவிட்டது. நான் தூரமாக நின்றிருந்தேன். அதனால் கேட்கவில்லை. போலிசார் விசாரணையின்போது எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், எங்களை பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், நீதிமன்ற ஆணையரை எதிரி மகேந்திரன் உள்ளே செல்லவிடாமல் கையை பிடித்து இழுத்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் விசாரணையின்போது என்ன சொன்னேன் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் அளக்க சென்ற கட்டிடத்தின் கதவு ஜன்னல்கள் உடைக்கப் பட்டிருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அளந்து முடிக்கும் வரை இருதரப்பினர்களும் அங்கிருந்தார்களா என்றால் ஞாபகமில்லை.

மறுவிசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW.10

| | | |
|---|---|---|
| Name | : | வெங்கடாசலம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 24.11.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் திருச்செங்கோடு AKE ரோடு காந்தி நகரில் குடியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது. திருச்செங்கோடு தேரடி வீதியில் 2018 ல் தேதி ஞாபகமில்லை. காலை சுமார் 7.30 மணியளவில் போலிசார் 2, 3 நாட்களுக்கு முன்பு சொத்து தகராறு சம்பந்தமாக தகராறு ஏற்பட்டதாக விசாரித்து போலிசார் எழுதிக்கொண்டு , மேப் போட்டார்கள். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.2. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கின் எதிரி மகேந்திரனையும், கன்னியப்பனையும் எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியும். அவர்களிடம் எனக்கு பேச்சு வார்த்தை, பழக்க வழக்கம் உள்ளதா என்றால் பார்த்தால் பேசுவார்கள். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

CNR.No.TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 11.

Name : ராஜசேகர்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 24.11.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் மண்டகபாளையத்தில் குடியிருக்கிறேன். பிரஸ்-ல் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 6.00, 7.00 மணியளவில் திருச்செங்கோடு சின்னத்தேர் அருகில் சப் இன்ஸ்பெக்டர் மேடம் 3 நாட்களுக்கு முன்பு நடந்த பிரச்சினை தெரியுமா என்று கேட்டார். சொத்துதகராறு சம்பந்தமாக பிரச்சினை நடந்ததை கேள்விப்பட்டதாக சொன்னேன். நேரில் பார்க்கவில்லை என்று சொன்னேன். சம்பவ இடத்தை பார்வையிட்டு மேப் வரைந்தார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன்.

குறுக்கு விசாரணை.-

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விப்பட்டு தான் தெரியும். எனக்கு வாதி கணேசனை தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளைத் தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை.- இல்லை.